# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051852

1. District மாவட்டம் : தருமபுரி PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு, Year ஆண்டு : 2020 FIR No. மு.த.அ. எண் : 14/AC/2020 Date நாள் : 12.12.2020

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள் : 7, 12 r/w 7.
   (ii) Act சட்டம்: திருத்தியமைக்கப்பட்டது 2018 Sections பிரிவுகள் :
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள் :
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல் : Date to நாள் வரை : 12.12.2020
   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை : காலை 04.10 மணிக்கு சுமார்.
   (b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : Time நேரம் :
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : Time நேரம் : 12.12.2020 பிற்பகல் 13.00 மணி

4. Type of Information : Written/ Oral தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : 23 கி.மீ, வடக்கு
   Beat Number முறைக் காவல் எண் : (b) Address முகவரி : போக்குவரத்து துறை சோதனைச் சாவடி, சாமிக்கோவில், [illegible]பள்ளி.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : District மாவட்டம் :

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. A.P. [illegible] (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : திரு. பழனி
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 57 (d) Nationality நாட்டினம் : (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue வழங்கப்பட்ட நாள் : Place of Issue வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation தொழில் : துணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address முகவரி : ஆய்வுக்குழு அலுவலகம், ஆட்சியரகம், சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. S. [illegible] செல்வம் (46), த/பெ. சாமிதுரை, மோட்டார் வாகன ஆய்வாளர் (நி.நி.அ), சாமிக்கோவில் போக்குவரத்து துறை சோதனைச் சாவடி, [illegible]பள்ளி.
   2) திரு. R. முருகேசன் (35), த/பெ. இராமகோபால், மேலப்பாடு கிராமம் (ம) அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : தாமதமில்லை.

GCP 240 34(Type-2) 90,000 Cps.-21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 12/12/20

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
12/12/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.2020 – 15.00 மணி

Name: பெயர் S. முருகேசன்
Rank: நிலை No. எண்
காவல் ஆய்வாளர்,
[illegible]
[illegible]

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.14/AC/2020 u/s 7 and 12 r/w 7 of the Prevention of Corruption act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண் 12 ன் இணைப்பு**

இன்று 12.12.2020 ஆம் தேதி பகல் 13.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது என்னிடம் திரு. A.P. பெரியசாமி, துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் அவர்கள் எழுத்து முலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புநர்: A.P. பெரியசாமி, துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் வட்டம் குருவிநாயனப்பள்ளி காளிக்கோவிலில் உள்ள போக்குவரத்துத் துறை சோதனை சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் அந்த சோதனைச் சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் விதிமீறல்கள் மீது நடவடிக்கை எடுக்காமலிருக்கவும் நடைசீட்டுகளில் முத்திரை பதிக்கவும் வாகன ஓட்டிகளிடமிருந்தும் உரிமையாளர்களிடமிருந்தும் கையூட்டு பணம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் இன்று 12.12.2020 ஆம் தேதி அதிகாலை 04.10 மணிக்கு நான் மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.இரா.அருள்பிரசாத் மற்றும் காவலர்களுடன் திடீர் தணிக்கை கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சுமார் 03.30 மணியளவில் அரசுக்கு சொந்தமான TN 21 G 0635 நான்கு சக்கர வாகனத்தில் புறப்பட்டு இன்று விடியற்காலை சுமார் 04.10 மணியளவில் கிருஷ்ணகிரி to குப்பம் செல்லும் சாலையில் குருவிநாயனப்பள்ளி காளிக்கோவில் போக்குவரத்து சோதனை சாவடி அருகில் வரப்பட்டது. நான், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர்களுடன் மேற்படி சோதனைச்சாவடியின் அருகே வந்த போது சோதனைச்சாவடிக்கு வெளியே சாலையின் ஓரம் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த 1. திரு.சிவகுரு, வயது.35/2020 த/பெ இராஜகோபால், மணியம்பாடி கிராமம், பாப்பிரெட்டிபட்டி அஞ்சல், தருமபுரி மாவட்டம் மற்றும் 2. திரு.இலட்சுமணன், வயது.35/2020, த/பெ இராம கவுண்டர், குருவிநாயனப்பள்ளி கிராமம் மற்றும் அஞ்சல், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகிய இரண்டு நபர்கள் நின்று கொண்டு

சோதனைச்சாவடியின் வழியாக வந்து செல்லும் வாகனங்களை நிறுத்தும்படி சைகை செய்து கொண்டிருந்தனர். அவர்களை விசாரித்தபோது தாங்கள் தற்காலிகமாக சோதனை சாவடியில் வேலை செய்தவாக கூறியதன் பேரில் அவர்களை அழைத்துக்கொண்டு சோதனைச்சாவடியின் உள்ளே செல்லப்பட்டது. அந்த அலுவலகத்தில் வடக்கு முகம் பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் சு.செந்தில்செல்வம் என்றும், மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பம் அல்லாதது) பணிபுரிந்து வருவதாகவும், 11.12.2020-ஆம் தேதி இரவு 8 மணிமுதல் 12.12.2020 ஆம் தேதி காலை 8 மணி வரையில் பணி நேரம் இருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் நான், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர்கள் அவரவர் தம் அடையாள அட்டைகளை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டு, திடீர் தணிக்கைக்கு வந்த விவரத்தை விளக்கமாக கூறப்பட்டது. பிறகு அந்த அலுவலகத்தில் மேற்கு முகம் பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் பாலகிருஷ்ணன் என்றும், தான் சோதனை சாவடியில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், 11.12.2020-ஆம் தேதி இரவு 8 மணிமுதல் 12.12.2020 ஆம் தேதி காலை 8 மணி வரையில் பணி நேரம் இருப்பதாகவும் கூறினார். பிறகு அன்றைய தினம் அரசு கணக்கில் வசூலிக்கப்பட்ட தொகை பற்றி அவரிடம் கேட்க, தொகை வசூல் செய்யும் பணியை அலுவலக உதவியாளர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களிடமே உள்ளது என்ற விவரத்தினை தெரிவித்தார். பிறகு உதவியாளர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களிடம் மேற்படி அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகை பற்றி கேட்க, அவர் 11.12.2020-ஆம் தேதி காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை பகல் பொழுதில் பணியில் இருந்தவர்கள் வசூலித்து ஒப்படைக்கப்பட்ட பணம் ரூபாய் 21,120/- உள்ளதாகவும், இரவு 8 மணிமுதல் மறுநாள் 12.12.2020-ஆம் தேதி விடியற்காலை 4 மணி வரை பல்வேறு தலைப்பின் கீழ் வசூல் செய்யப்பட்ட தொகை ரூபாய் 1,27,450/- எனவும் தெரிவித்து, மேற்படி தொகையினை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி தொகையினை அலுவலகத்திலிருந்த பணம் எண்ணும் இயந்திரம் மூலமாக கணக்கீடப்பட்டதில், அதில் ரூபாய் 1,48,570/- இருந்தது. மேற்படி இரு தொகையையும் சோதனைச்சாவடியில் பராமரித்து வரும் ரொக்கப்பதிவேட்டிலும், கணினியில் பிரதி எடுக்கப்பட்ட பட்டியலையும் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்தது. மேற்படி இரண்டு தொகைகளும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் என்பதால் திரும்ப திரு.பாலகிருஷ்ணன் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிறகு திரு.பாலகிருஷ்ணன் அவர்களிடம் வேறு பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது சட்டையின் இடது பக்க வெளிப்புற மேல்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.560/-ஐ எடுத்து ஆஜர்

செய்து, அது தனது சொந்த பணம் என்றும், கை செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்கதக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சு.செந்தில்செல்வம் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது பேன்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,330/- ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த பணம் என்றும், கை செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்கதக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சு.செந்தில்செல்வம் முன்பு இருந்த அவருடைய மேஜையை சோதனை செய்தபோது, அவருடைய மேஜையின் மீது ஒரு அட்டைப்பெட்டியில் 500, 200, 100 ரூபாய் தாள்கள் இருந்தன. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்கையில் அதில் மொத்தம் ரூபாய் 15,300/- இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் விளக்கம் கேட்க அவர் மௌனமாக இருந்தார். மேற்படி தொகை ரூ.15,300/- அவருடைய பணியை ஆற்றுகையில் வாகன டிரைவர்களிடமிருந்தும், உரிமையாளர்களிடமிருந்தும் லஞ்சமாக கேட்டு பெற்றுகொண்ட பணமாக இருக்கக்கூடுமென்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால், மேல்விசாரணைக்காக ரூ.15,300/- தணிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. மேலும், அந்த மேஜையில் மேற்படி அட்டைப்பெட்டியின் அருகில் இளஞ்சிவப்பு நிற கலர் கிளிப்பில் 200, 100 மற்றும் 50 ரூபாய் தாள்கள் இருந்தது. அதை எண்ணிப்பார்க்கையில் அதில் மொத்தம் ரூபாய் 1,250/- இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் விளக்கம் கேட்க அவர் மௌனமாக இருந்தார். மேற்படி தொகை ரூ.1,250/- அவருடைய பணியை ஆற்றுகையில் வாகன டிரைவர்களிடமிருந்தும், உரிமையாளர்களிடமிருந்தும் லஞ்சமாக கேட்டு பெற்றுகொண்ட பணமாக இருக்கக்கூடுமென்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால், மேல்விசாரணைக்காக ரூ.1,250/- தணிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. பிறகு மேற்படி சோதனைச்சாவடியில் இருந்த CCTV கேமரா மானிட்டர் வைக்கப்பட்டிருந்த மேஜையின் வலது புற கீழ்பகுதி அறையில் சோதனை செய்து பார்க்க ஒரு பச்சைநிற ஜிப் போட்ட கோப்பினுள் செய்தித்தாளில் மடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தில் 200 மற்றும் 100 ரூபாய் தாள்கள் வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்கையில் அதில் மொத்தம் ரூ.6,000/- இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் விளக்கம் கேட்க அவர் அந்த பணத்தை பற்றி தனக்கு தெரியாது என்று கூறினார். மேற்படி தொகை ரூ.6,000/- அவருடைய பணியை

ஆற்றுகையில் வாகன டிரைவர்களிடமிருந்தும், உரிமையாளர்களிடமிருந்தும் லஞ்சமாக கேட்டு பெற்றுகொண்ட பணமாக இருக்கக்கூடுமென்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால், மேல்விசாரணைக்காக அந்த பணம் ரூ.6,000/- தணிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு மேற்படி சோதனைச்சாவடியில் தற்காலிகமாக பணிபுரிந்து வந்த திரு.இலட்சுமணன் மற்றும் திரு.சிவகுரு ஆகியோரை விசாரிக்க திரு.இலட்சுமணன் என்பவர் கடந்த 2 ஆண்டுகாலமாக வேலை செய்து வருவதாகவும், அவர் தனக்கு தினக்கூலியாக ரூ.600/- முதல் ரூ.800/- வரை வழங்குவதாகவும் தெரிவித்தார். பிறகு திரு.சிவகுரு என்பவர் தான் சுமார் 6 மாதமாக வேலை செய்து வருவதாகவும், தனக்கு ரூபாய் 600/- தினக்கூலியாக தருவதாகவும் கூறினார். மேற்படி தினக்கூலியாக வேலை செய்து வரும் இருவரைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்செல்வம் அவரிடம் விசாரிக்க, மேற்படி நபர்கள் இருவரும் தான் இச்சோதனைச்சாவடியில் பணியில் சேருவதற்கு முன்பு இருந்தே தினக்கூலியாக வேலை செய்து வருவதாவும், அவர்கள் பணி தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து எவ்வித பணி உத்தரவு ஆணை வழங்கப்படவில்லை எனவும் கூறினார். மேற்படி திரு.இலட்சுமணன் என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 225/- இருந்தது. அதைப்பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய கை செலவிற்காக வைத்திருப்பதாக கூறினார். எனவே அந்த பணம் ரூ.255/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மற்றொரு நபர் திரு.சிவகுரு என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய பேண்ட்டின் வலது முன்புற பாக்கெட்டில் இருந்து ரூபாய் 2,760/-, தன்னுடைய பேண்ட்டின் வலது பின்புற பாக்கெட்டில் இருந்து இரண்டு காக்கி நிற காகித கவரை எடுத்து ஆஜர் செய்தார். அந்த காக்கி நிற கவர் ஒன்றில் ரூபாய் 3,000/-மும், மற்றொன்றில் ரூபாய் 3,500/- இருந்தது. ஆக மொத்தம் ரூபாய் 9,260/- குறித்து திரு.ரா.சிவகுரு என்பவரை விசாரிக்க, அவர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் கூறியதன் பேரில் சோதனைச்சாவடியின் வழியாக செல்லும் வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணம் என்றும் அப்பணத்தை அலுவலகத்தில் உள்ள காக்கி கவர்களில் போட்டு வைத்திருந்ததாகவும், வழக்கமாக தன்னுடைய வேலை நேரம் முடிந்து செல்லும் போது பணியில் இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்துவிடுவதாகவும் கூறினார். மேலும் மேற்படி தொகையில் இருந்து தனக்கும் தன்னுடன் வேலை செய்யும் திரு.இலட்சுமணன் என்பவருக்கும் தினக்கூலி வழங்குவதாகவும் சொன்னார். மேற்படி தொகை ரூ.9,260/- அவருடைய பணியை ஆற்றுகையில் வாகன டிரைவர்களிடமிருந்தும், உரிமையாளர்களிடமிருந்தும் லஞ்சமாக கேட்டு

பெற்றுகொண்ட பணமாக இருக்கக்கூடுமென்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதால், மேல்விசாரணைக்காக அந்த பணம் ரூ.9,260/- தணிக்கையின் போது கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்செல்வம் அவர்களிடம் கொடிநாள் வசூல் தொகை ஏதாவது நிலுவையில் உள்ளதா என்று கேட்க, நிலுவையில் ஏதும் இல்லை என்று கூறினார். மேலும் அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சு.செந்தில்செல்வம் அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் கிருஷ்ணகிரி To குப்பம் சாலையில் குருவிநாயனப்பள்ளி, காளிக்கோவில் சோதனை சாவடியை கடந்து சென்ற வாகன ஓட்டுனர்கள் திரு.குமார், திரு.ஜீவானந்தம் மற்றும் ராஜா ஆகியோரிடமிருந்து தனித்தனியாக வாக்குமூலங்கள் என்னால் பதிவுசெய்யப்பட்டது. மேலும் கைப்பற்றிய பணத்தையும், தயார் செய்த செயல்முறை நடவடிக்கையையும் ஆஜர் படுத்துகிறேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் A.P. பெரியசாமி. மேற்கண்ட புகாரின் பேரில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.14/AC/2020 u/s 7 and 12 r/w 7 of the Prevention of Corruption act 1988 as amended in 2018 ன்படி இன்று 12.12.2020 ஆம் தேதி பகல் 13.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும், கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

12/12/2020

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை
கிருஷ்ணகிரி.